ஆளுகைச் சபை

இலங்கை மத்திய வங்கி

**2024 பெப்புருவரி 13 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2024இன் 01ஆம் இலக்கம்**

---

# காலாந்தர அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சட்ட ஏற்பாடுகள் | 1.1 | 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 133ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12(1)ஆம் பிரிவின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி, காலாந்தர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்குப் பணிப்புரைகளை வழங்கமுடியும். |
| 2. | பணிப்புரைகளின் குறிக்கோள்கள் | 2.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழில் மற்றும் கம்பனித் தொழிற்பாடுகள் நடத்தப்படும் விதம் பற்றி அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பற்றி கண்டறிவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பற்றி உரிய நேரத்தில், துல்லியமான, ஒத்திசைவான மற்றும் பூரணமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். |
| 3. | ஏற்புடைத்தன்மை | 3.1 | இப்பணிப்புரையானது, நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் தகவல் வலையமைப்பு அறிக்கையிடல் முறைமையிலுள்ள (பின்நெட்) அனைத்துக் காலாந்தரக் கூற்றுக்களுக்கும் ஏற்புடைத்தாயிருத்தல் வேண்டும். |
| 4. | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பொறுப்புக்கள் | 4.1 | ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் துல்லியமான, ஒத்திசைவான மற்றும் பூரணமான காலந்தர தரவுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| | | 4.2 | இப்பணிப்புரை வழங்கப்பட்ட மூன்று மாத காலப்பகுதிக்குள் ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் குறித்துரைக்கப்பட்ட முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளிடம் பின்நெட்டிலுள்ள காலாந்தரக் கூற்றுக்களின் துல்லியமானதன்மை, ஒத்திசைவுத்தன்மை மற்றும் பூரணமான தன்மை தொடர்பிலான அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பினை ஒப்படைத்திருத்தல் வேண்டும். முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளின் நியமனம் தொடர்பில் பின்னர் செய்யப்படும் ஏதேனும் மாற்றங்கள் பணிப்பாளருக்கு மூன்று வேலை நாட்களுக்குள் மின்னஞ்சல் அல்லது கடித மூலம் சரியான முறையில் தெரியப்படுத்தப்படல் வேண்டும். |
| | | 4.3 | பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் குறிப்பிட்ட காலாந்தரக் கூற்று தொடர்பில் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படல், துல்லியமானதன்மை, ஒத்திசைவுத்தன்மை, பூரணமானதன்மையினை உறுதிப்படுத்துகின்ற கடப்பாட்டினைக் கொண்டிருப்பார். |

| | | | |
|---|---|---|---|
| 5. | இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் | 5.1 | தொடர்பான காலாந்தரக் கூற்றுக்களில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கி எந்தவொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் தொடர்பான முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளுகைக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். |
| 6. | வரைவிலக்கணங்கள் | 6.1 | ‘‘முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள்’’ என்பது 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் (முக்கியமான பொறுப்பான ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பீடு) பிரிவு 4.1(ஆ)இல் வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும். |
| | | 6.2 | ‘‘பணிப்பாளர்’’ என்பதன் பொருள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்பதாகும். |
| 7. | பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 7.1 | 2013ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் 5ஆம் பிரிவு இரத்துச் செய்யப்பட்டு அதன் பொருட்டு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்யப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:<br>‘‘ஒவ்வொரு நிதிக் கம்பனியும் அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் (15ஆம்) திகதியில் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையிடல் முறைமையூடாக (பின்நெட்) பணிப்பாளருக்கு திரவச் சொத்துக்கள் பற்றிய விபரங்களை அறிக்கையிடுதல் வேண்டும்’’ |
| | | 7.2 | 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் (மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள்) 2.1ஆம் பிரிவு, அதன் (1)ஆம் துணைப் பிரிவு இரத்துச் செய்யப்பட்டு அதன் பொருட்டு பின்வருவன பதிலீடு செய்யப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:<br>‘‘காலாண்டு: அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் (15ஆம்) திகதியில் ஒவ்வொரு காலாண்டினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடல்’’ |
| 8. | பணிப்புரைகளை இரத்துச் செய்தல் | | இப்பணிப்புரை விடுக்கப்படுகின்ற நாளிலிருந்து பின்வரும் பணிப்புரைகள் இரத்துச் செய்யப்படுகின்றன. |
| | | 8.1 | 2011ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை |
| | | 8.2 | 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் (வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்) பிரிவு 4.1 |
| | | 8.3 | 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் (கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்) பின்னிணைப்பு ‘சி’ இன் பிரிவு 07. |

**முனைவர் பி. நந்தலால் வீரசிங்க**

ஆளுகைச் சபையின் தலைவர் மற்றும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்